# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - SEPTEMBER 2019

மலர்: 12 இதழ்: 12 செப்டம்பர் 2019 விலை: ரூ. 10

## நான் ஏன் பிறந்தேன்?



- வழிகாட்டுதலின்றி வாழ்க்கை சாத்தியமா?
- வான்மறை வந்திறங்கிய வரலாற்றுச் சூழல்
- வந்த நாள் முதல் வான்மறையின் பாதுகாப்பு



இன்றைய இறைத்தூதர் யார்?


دَعَوْا لِلرَّحْمَٰنِ وَلَدًا ﴿٩١﴾ وَمَا يَنبَغِي لِلرَّحْمَٰنِ
أَن يَتَّخِذَ وَلَدًا ﴿٩٢﴾ إِن كُلُّ مَن فِي السَّمَاوَاتِ وَا
لْأَرْضِ إِلَّا آتِي الرَّحْمَٰنِ عَبْدًا ﴿٩٣﴾ لَّقَدْ أَحْصَاهُمْ
وَعَدَّهُمْ عَدًّا ﴿٩٤﴾ وَكُلُّهُمْ آتِيهِ يَوْمَ الْقِيَامَةِ
فَرْدًا ﴿٩٥﴾ إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ
سَيَجْعَلُ لَهُمُ الرَّحْمَٰنُ وُدًّا ﴿٩٦﴾ فَإِنَّمَا يَسَّرْنَاهُ
بِلِسَانِكَ لِتُبَشِّرَ بِهِ الْمُتَّقِينَ وَتُنذِرَ بِهِ قَوْمًا لُّدًّا ﴿٩٧﴾ وَ
كَمْ أَهْلَكْنَا قَبْلَهُم مِّن قَرْنٍ هَلْ تُحِسُّ مِنْهُم مِّنْ أَحَدٍ أَوْ
تَسْمَعُ لَهُمْ رِكْزًا ﴿٩٨﴾

سورة طه

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ. طه ﴿١﴾ مَا أَنزَلْنَا
عَلَيْكَ الْقُرْآنَ لِتَشْقَىٰ ﴿٢﴾ إِلَّا تَذْكِرَةً لِّمَن يَخْشَىٰ ﴿٣﴾
تَنزِيلًا مِّمَّنْ خَلَقَ الْأَرْضَ وَالسَّمَاوَاتِ الْعُلَى ﴿٤﴾



# அழியா அற்புதம் திருக்குர்ஆன்

# பர்மிங்ஹாம் திருக்குர்ஆன் பிரதிகள்

● பர்மிங்ஹாம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 2015 ஆண்டு தங்களின் காப்பகத்தில் காணப்பட்ட தோலில் எழுதப்பட்டிருந்த இரண்டு திருக்குர்ஆன் பக்கங்களை கார்பன் டேட்டிங் ஆராய்ச்சிக்கு உட்படுத்திப் பார்த்துள்ளனர். ஆராய்ச்சி முடிவில் அவை இரண்டும் கி.பி. 568 மற்றும் 645-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கும் என 95.4 சதவீதம் அளவுக்கு துல்லியமாக கணித்துள்ளனர்.


● எனினும், இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் முஹம்மது நபி(ஸல்) வாழ்ந்த சமகாலத்தில் கி.பி. 570 மற்றும் 632-க்கு இடைப்பட்ட காலத்தில் இந்த குர்ஆன் எழுதப்பட்டிருக்கலாம் என தெரியவந்துள்ளது.


● பண்டைக்காலத்தில் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட தோலின் மீது, அரபு மொழியின் முந்தைய மொழி வடிவமான ஹிஜாஸி மொழியில் மையினால் வசனங்களாக எழுதப்பட்டுள்ளது.

● அந்த இரு பக்கங்களிலும் குர்ஆனின் 18 முதல் 20 வரையிலான சூறாக்களின் (அத்தியாயம்) வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

● இந்தப் பிரதியை எழுதியவர் இறைதூதர் முகமது நபி அவர்களைக் கண்டும் கேட்டும் இருந்த ஒருவராக இருந்திருப்பார் என பர்மிங்ஹாம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

● ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட பக்கங்களை இன்றைய திருக்குர்ஆன் பிரதிகளோடு ஒப்பீடு செய்யும்போது எந்த ஒரு எழுத்தும் மாற்றமில்லாமல் ஒருபோலவே இருப்பதைத்தான் படத்தில் காண்கிறீர்கள்.


الرَّحْمَٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوَىٰ ﴿٥﴾ لَهُ مَا فِي السَّمَا
وَاتِ وَمَا فِي الْأَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمَا تَحْتَ
الثَّرَىٰ ﴿٦﴾ وَإِن تَجْهَرْ بِالْقَوْلِ فَإِنَّهُ يَعْلَمُ السِّرَّ
وَأَخْفَى ﴿٧﴾ اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا هُوَ لَهُ الْأَسْمَاءُ ا
لْحُسْنَىٰ ﴿٨﴾ وَهَلْ أَتَاكَ حَدِيثُ مُوسَىٰ ﴿٩﴾ إِذْ
رَأَىٰ نَارًا فَقَالَ لِأَهْلِهِ امْكُثُوا إِنِّي آنَسْتُ نَا
رًا لَّعَلِّي آتِيكُم مِّنْهَا بِقَبَسٍ أَوْ أَجِدُ عَلَى ا
لنَّارِ هُدًى ﴿١٠﴾ فَلَمَّا أَتَاهَا نُودِيَ يَا مُوسَىٰ ﴿١١﴾
إِنِّي أَنَا رَبُّكَ فَاخْلَعْ نَعْلَيْكَ إِنَّكَ بِا
لْوَادِ الْمُقَدَّسِ طُوًى ﴿١٢﴾ وَأَنَا اخْتَرْتُكَ



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 12 இதழ்: 12 செப்டம்பர் 2019 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

படைத்தவனன்றி இறைவன் யாருமில்லை 2
இலக்கற்ற பயணியா நான்? -4
வழிகாட்டுதலின்றி வாழ்க்கை சாத்தியமா? -7
படைத்தவன் வழங்கும் கையேடுகள்!-9
வாசகர் எண்ணம் -10
வான்மறை வந்திறங்கிய வரலாற்றுச் சூழல் -11
வந்த நாள் முதல் வான்மறையின் பாதுகாப்பு -14
மனித மனங்களே பாதுகாப்புப் பெட்டகங்கள் -16
இன்றைய இறைத்தூதர் யார்?-18
இன்றைய இறைத்தூதரே முஹம்மது (ஸல்) -19
பாதுகாக்கப்படும் இறைவேதம் மற்றொரு சான்று -20
வணங்கப்படாத இறைத்தூதர் - இதும் ஒரு சான்று!-21
அகிலத்தாருக்கு அழகிய முன்மாதிரி-22
நபிமொழிகள் கூறும் நற்பண்புகள் -23

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.com www.waytoparadise.in**

# படைத்தவனன்றி இறைவன் யாருமில்லை

அல்லாஹ் என்ற அரபிச்சொல்லின் பொருள் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் என்பது. படைத்தவனை விடுத்து படைப்பினங்களை வணங்கும் செயல் இறைவனைப் பற்றிய மரியாதை உணர்வை (seriousness) மக்களிடையே இல்லாமல் ஆக்கிவிடுவதால் சமூகத்தில் பாவங்கள் அதிகரிக்கின்றன. உண்மை இறைவனின் தனித்தன்மைகளை ஆராய்ந்து அறிவோர் படைத்தவனைத் தவிர வேறு எதையும் யாரையும் இறைவனாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

### என்றும் நிலைத்திருப்பவன்

- **அல்லாஹ் - அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) இறைவன் வேறில்லை. அவன் நித்திய ஜீவன் என்றும் நிலைத்திருப்பவன். (திருக்குர்ஆன் 3:2)**

### உருவாக்குபவன்



- **அவன்தான் கர்ப்பக் கோளறைகளில் தான் நாடியபடி உங்களை உருவாக்குகின்றான் அவனைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறில்லை. அவன் யாவரையும் மிகைத் தோனாகவும், விவேகம் மிக்கோனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 3:6)**

### மழை பெய்வித்தல் பயிர் முளைப்பித்தல்



- **அன்றியும், வானங்களையும் பூமியையும் படைத்து, உங்களுக்கு வானத்திலிருந்து மழையை இறக்கி வைப்பவன் யார்? பின்னர் அதைக் கொண்டு செழிப்பான தோட்டங்களை நாம் முளைக்கச் செய்கிறோம். அதன் மரங்களை முளைக்கச் செய்வது உங்களால் முடியாது. (அவ்வாறிருக்க) அல்லாஹ்வுடன் (வேறு) இறைவன் இருக்கின்றானா? இல்லை! ஆயினும் அவர்கள் (தம் கற்பனை தெய்வங்களை அல்லாஹ்வுக்கு) சமமாக்கும் மக்களாகவே இருக்கிறார்கள். (திருக்குர்ஆன் 27:60)**

### ஆறுகள் மலைகள், கடல்கள் அமைத்தவன்

- **இந்தப் பூமியை வசிக்கத் தக்க இடமாக ஆக்கியவனும், அதனிடையே ஆறுகளை உண்டாக்கியவனும் அதற்காக (அதன் மீது அசையா) மலைகளை உண்டாக்கியவனும் இரு கடல்களுக்கிடையே தடுப்பை உண்டாக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) இறைவன் இருக்கின்றானா? இல்லை! (எனினும்) அவர்களில் பெரும்பாலோர் அறியாதவர்களாக இருக்கின்றனர். (திருக்குர்ஆன் 27:61)**

### பிரார்த்தனைக்கு பதிலளிப்பவன்

- **கஷ்டத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால் அவனுக்கு பதில் கொடுத்து, அவன் துன்பத்தை நீக்குபவனும், உங்களை இப்பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) இறைவன் இருக்கின்றானா? (இல்லை) எனினும் (இவையெல்லாம் பற்றி) நீங்கள் சிந்தித்துப் பார்ப்பது மிகக் குறைவே யாகும்.**

(திருக்குர்ஆன் 27:62)


**வழிகாட்டுபவன்**

● கரையிலும் கடலிலுமுள்ள இருள்களில் உங்களை நேரான வழியில் செலுத்துபவன் யார்? மேலும், அருள் மாரிக்கு முன்னே நன்மாராயம் (கூறுவன) ஆக காற்றுகளை அனுப்பி வைப்பவன் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) இறைவன் இருக்கின்றானா? - அவர்கள் இணை வைப்பவற்றைவிட அல்லாஹ் மிகவும் உயர்வானவன். (திருக்குர்ஆன் 27:63)

**படைப்பைத் துவங்கி மீண்டும் மீண்டும் படைப்பவன்**

● முதன் முதலில் படைப்பைத் துவங்குபவனும், பின்னர் அதனை மீண்டும் உண்டாக்கி வைப்பவனும் யார்? வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு ஆகாரம் அளிப்பவன் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) இறைவன் இருக்கின்றானா? (நபியே!) நீர் கூறுவீராக: “நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.” (திருக்குர்ஆன் 27:64)

**இரவையும் பகலையும் கட்டுப்படுத்துபவன்**



● (நபியே!) நீர் கூறுவீராக: “இறுதி நாள் வரை அல்லாஹ் உங்கள் மீது இரவை நிரந்தரமாக இருக்கும்படிச் செய்து விட்டால், உங்களுக்கு(ப் பகலின்) வெளிச்சத்தைக் கொண்டுவரக் கூடியவன் அல்லாஹ்வை அன்றி இறைவன் உண்டா என்பதை நீங்கள் (சிந்தித்துப்) பார்த்தீர்களா? (இவ்வுண்மையை) நீங்கள் செவியேற்க வேண்டாமா?” (திருக்குர்ஆன் 28:71)

● “இறுதி நாள்வரை உங்கள் மீது அல்லாஹ் பகலை நிரந்தரமாக இருக்கும்படிச் செய்து விட்டால், நீங்கள் அதில் ஓய்வு பெறும் பொருட்டு உங்களுக்கு இரவைக் கொண்டு வரக்கூடியவன் அல்லாஹ்வையன்றி இறைவன் உண்டா என்பதை நீங்கள் (சிந்தித்துப்) பார்த்தீர்களா? (இவ்வுண்மையை) நீங்கள் நோக்க வேண்டாமா?” என்று கூறுவீராக! (திருக்குர்ஆன் 28:72)

*இவைபோன்ற பற்பல இறை வசனங்களை திருக்குர்ஆனில் காணலாம். மக்கள் கடவுளாகக் கருதி வணங்கும் படைப்பினங்களுக்கும் கற்பனைப் பொருட்களுக்கும் மேற்கூறப்பட்ட தனித்தன்மைகள் எதுவும் அறவே கிடையாது. அவ்வாறிருக்கும்போது அவற்றை வணங்குவோருக்கு எந்த பயனும் விளைவதில்லை. மட்டுமல்ல, இச்செயல் பற்பல குழப்பங்களுக்கும் அதர்மத்திற்கும் வித்திடுவதால் மறுமையில் இறை தண்டனையையும் பெற்றுத்தருகிறது.*

● *நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம் புகுவார். அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) (நூல் : புகாரி)*

# இலக்கற்ற பயணியா நான்?

ஒரு பஸ்ஸில் கண்டக்டர் டிக்கெட் கொடுத்துக்கொண்டே வருகிறார். டிக்கெட் எடுக்காமல் உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு பயணியை எழுப்பி...

“அய்யா டிக்கெட், டிக்கெட்”

விழித்துக் கொண்ட பயணி சுதாரித்துக் கொண்டபின்...




“அய்யா, நீங்கள் எங்கே ஏறினீர்கள்?”

“தெரியாது”

“நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?”

“தெரியாது”

“பிறகு எதற்காக இந்த பஸ்ஸில் ஏறினீர்கள்?”

“தெரியாது!”

இப்படிப்பட்ட ஒரு பயணியைப் பற்றி என்ன கருதுவீர்கள்?

சரி, இப்போது உங்களுக்கு வருவோம்...

‘நான் பிறந்த இடத்தையோ, என் பிறந்த நாளையோ, ஏன் என் பெற்றோர்களையோ கூட நான் தேர்ந்தெடுத்து இங்கு வரவில்லை என்பது உறுதி. நானாக விருப்பப்பட்டு நானே பிறந்து இங்கு வந்தேனா என்றால் அதுவும் இல்லை. பிறகு எதற்காக நானிங்கு வந்தேன்? என் வாழ்வும் மரணமும் எதற்காக?’

இவ்வாறு நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? சிந்திக்காவிட்டால் நாமும் மேற்படி பயணியைப் போல் ஆகிவிடுவோமல்லவா?

**நோக்கமின்றி எதுவுமில்லை!**

நம்மை சுற்றிப் பரவிக்கிடக்கும் எண்ணற்ற பொருட்களை சற்று பாருங்கள். நாம் காணும் இயற்கைப் பொருட்களிலோ அல்லது நம்மால் தயாரிக்கப்பட்ட பொருட்களிலோ நோக்கம் இல்லாத எந்தப் பொருளையும் நம்மால் காணமுடிகிறதா? சரி, நம் உடல் உறுப்புகளையே எடுத்துக் கொள்ளுங்களேன்! நோக்கம் இல்லாத ஏதாவது ஒரு உறுப்பை காட்டுங்கள் பார்ப்போம்!

நாம் தயாரித்த பொருட்கள் அனைத்திற்கும் பின்னால் நோக்கம் இருக்கும்போது, நம் உடல் உறுப்புகள் அனைத்திற்கும் பின்னால் நோக்கம் இருக்கும்போது, இயற்கை வளங்கள் அனைத்திற்கும் பின்னால் நோக்கம் இருக்கும்போது, உலகெங்கும் பரவிக்கிடக்கும் இவ்வளவு பெரிய மனிதகுலம் மட்டும் எந்த ஒரு நோக்கமும் இல்லாமல் வாழ்கிறது என்று எண்ணினால், அது சரியாக இருக்க முடியுமா?

நாம் வாழ்கின்ற இந்த வாழ்க்கையின் நோக்கம்தான் என்ன?..

பெயரும் புகழும் பெறுவதற்கா?.. உல்லாசமாக இருப்பதற்கா?.. செல்வந்தனாக வாழ்வதற்கா?.. இவை மட்டும்தான் வாழ்க்கையின் நோக்கம் என்றால், ஐந்தறிவு உள்ள மிருகங்களுக்கும் ஆறறிவு பெற்ற

மனிதனுக்கும் என்ன வேறுபாடு? இவற்றுக்கெல்லாம் அப்பால் நம் வாழ்விற்கு பின்னால் ஒரு உன்னத நோக்கம் இருக்க வேண்டும் என்றல்லவா நம் பகுத்தறிவு கூறுகிறது.. சற்று சிந்திப்போமே!

## எனது வாழ்வின் நோக்கத்தை தீர்மானிப்பது யார்?

"நான்தான் என் வாழ்வின் நோக்கத்தை தீர்மானிப்பேன்!" என்று நீங்கள் கூறலாம். உதாரணமாக ஒரு பேனாவை எடுத்துக்கொள்வோம். அது தயாரிக்கப்பட்டதன் உண்மையான நோக்கம் என்ன? நாம் சில சமயம் பேனாவை நம் காது குடைவதற்காக பயன்படுத்துவதுண்டு. அதற்காக பேனா காது குடைவதற்காக தயாரிக்கப்பட்டது என்று நாம் கூறமாட்டோம். பேனா எழுதுவதற்காகத்தான் தயாரிக்கப்பட்டது என்பதை உறுதியாக அறிவோம். ஆனால் அதைத் தீர்மானித்தது யார்?

அதை பயன்படுத்துபவரா? அல்லது அதனை விற்பனை செய்பவரா? அல்லது அதனைத் தயாரித்தவரா?

கண்டிப்பாக அதனை யார் முதன்முதலில் தயாரித்தாரோ அவர்தானே அதன் உண்மையான நோக்கத்தை தீர்மானிப்பவராக இருக்க முடியும்? இந்த வி'யத்தை நமக்கும் பொருத்திப் பார்ப்போமே!

நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்க்கையின் நோக்கமாக வெவ்வேறு காரணங்களை கூறலாம். ஆனால் அவையெதுவும் ஒருபோதும் நம் வாழ்க்கையின் உண்மையான நோக்கமாகாது. மாறாக, யார் நம்மை படைத்தானோ, யார் நமக்கு இந்த வாழ்வைக் கொடுத்தானோ அவன்தான் நம் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை தீர்மானிக்க முடியும் என்பது தெளிவு!

## நம்மை படைத்தவன் ஒருவன் உண்டா?



நாம் ஒரு பொருளை, ஒரு வாகனத்தை அல்லது ஒரு கட்டிடத்தை பார்க்கும்பொழுது அதை தயாரித்த ஒரு தனி மனிதனோ அல்லது நிறுவனமோ அதற்குப் பின்னால் இருப்பதை நம்மால் மறுக்க முடியாது. இந்த பிரபஞ்சம் சீராக ஒழுங்குடன் ஒரு அழகிய கட்டமைப்புடன் இயங்குவதை நாம் காணலாம். உதாரணமாக இன்றிலிருந்து அடுத்த நூறு ஆண்டுகளுக்கு பிறகு நடைபெறவுள்ள சூரிய சந்திர கிரகணத்தின் நேரத்தையும் சூரியன் உதிக்கும் மற்றும் மறையும் நேரத்தையும் மிக துல்லியமாக இன்றே நம்மால் கணிக்க முடிகிறது என்பதை அறிவோம். இது பிரபஞ்சத்தில் உள்ள நட்சத்திரங்களும் கோள்களும் ஒரு ஒழுங்கான கட்டமைப்பில் இயங்கினால் மட்டுமே இது சாத்தியமாகும். இந்த ஒழுங்கும் கட்டமைப்பும் தானாகத் தோன்ற இயலுமா என்று சிந்தித்துப்பாருங்கள்.

## ஓவியர் இன்றி ஓவியம் இல்லை

ஒரு சுவற்றின் மீது நாம் பல வண்ணத் திரவங்களை வேகமாக வீசினால் அது ஓர் பறவையை போன்றோ அல்லது ஓர் மலரை போன்றோ தோற்றம்

அளிக்க வாய்ப்புண்டு. ஆனால் மிக பிரபலமான மோனாலிசா ஓவியம் அங்கு தோன்ற வாய்ப்பே இல்லை. ஒரு தலைசிறந்த ஓவியன்தான் அந்த ஓவியத்தை வரைந்திருக்க முடியும் என்று ஒத்துக் கொள்ளும் நாம் மோனாலிசா ஓவியத்தை விட மிக நுட்பமான இந்த பிரபஞ்சம் மட்டும் தானாக தோன்றியது என்று கூறுவது எவ்வாறு பகுத்தறிவாகும்? நிச்சயமாக இந்த பிரபஞ்சத்தை படைத்த ஒரு மாபெரும் சக்தி இருக்க வேண்டும் என்பதுதானே பகுத்தறிவு நமக்கு கூறும் உண்மை!

நம் உடல் என்ற அற்புதமும் அது வசிக்கும் இந்தப் பிரபஞ்சம் என்ற மாபரும் அற்புதங்களின் தொகுப்பும் தானாகவோ தற்செயலாகவோ உருவாகவோ தொடர்ந்து இயங்கவோ முடியாது என்பது திண்ணம்! இதற்குப் பின்னால் ஒரு அளப்பரிய தன்னிகரற்ற சக்தியும் நுண்ணறிவும் அதிபக்குவமான திட்டமிடலும் அவற்றை அயராது இயக்குதலும் அவசியம் என்பதை பகுத்தறிவு நமக்கு எடுத்துரைக்கிறது. அந்த தன்னிகரற்ற சக்தி என்பது நம்மைப்போல் பலவீனமான ஒரு மனிதனைப் போலவோ அல்லது நம்மைவிடத் தாழ்ந்த ஒரு ஜீவியாகவோ அல்லது ஒரு வெறும் உணர்வற்ற ஒரு ஜடப்பொருளாகவோ இருக்க முடியாது என்பதும் அதே பகுத்தறிவு நமக்குச்சொல்லும் பாடமாகும். அந்த தன்னிகரற்ற சக்தியையே நாம் தமிழில் கடவுள் அல்லது இறைவன் என்றும் ஆங்கிலத்தில் காட் என்றும் அரபு மொழியில் அல்லாஹ் என்றும் நாம் அழைக்கிறோம். அந்த இறைவனின் பண்புகளை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

- **அவன்தான் அல்லாஹ், அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறெவரும் இல்லை. அவன் மறைவான மற்றும் வெளிப்படையான அனைத்தையும் அறிபவன். அவன் அளவிலாக் கருணையும் இணையிலாக்கிருபையும் உடையவன்.**
- **அவன்தான் அல்லாஹ்! அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவரும் இல்லை. அவன்தான் அரசன் மிகவும் தூய்மையானவன். முழுக்க முழுக்க சாந்தியுடையவன் அமைதி அளிப்பவன் பாதுகாவலன் அனைவரையும் மிகைத்தவன் தனது கட்டளையை வலிமையுடன் செயல்படுத்தக் கூடியவன் பெருமைக்குரியவன். மக்கள் புரியும் இணைவைப்புச் செயல்களை விட்டு தூய்மையானவன் அல்லாஹ்!**


**(திருக்குர்ஆன் 59:22,23)**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**
**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 6382301984, 9600426150, 9994810734 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 அதிராம்பட்டினம் 9566811099 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262**

# வழிகாட்டுதலின்றி வாழ்க்கை சாத்தியமா?

## 1. படைத்தவனே பயன்பாடு அறிவான்

இன்று உலகில் நாம் காணும் அல்லது புழங்கி வரும் இயந்திரங்களோடு ஒப்பிட்டால் மனித உடலே அனைத்திலும் அதி நவீனமான தொழில் நுட்பமும் சிக்கல்களும் கொண்ட இயந்திரம் என்பதை மறுக்க மாட்டோம். ஏனைய இயந்திரங்களுக்கு இல்லாத அறிவாற்றலும், உணர்ச்சிகளும் மனிதனுக்கு உள்ளன. அந்த இயந்திரங்களின் விடயத்தில் அவற்றின் தயாரிப்பாளர் கூறுவதை அப்படியே பின்பற்றுவது இன்றியமையாதது என்பதை அறிவோம். உதாரணமாக நாம் பயன்படுத்தும் ஸ்கூட்டர் அல்லது காரின் டயருக்கு காற்றடிக்கும் போது, அந்த வாகனத்தை தயாரித்தவர் எவ்வளவு காற்றழுத்தம் இருக்க வேண்டும் என்று சொல்கிறாரோ அந்த அளவிற்குத்தான் நாம் காற்றடிப்போம். மாறாக, நம் வாகனம் என்பதற்காக, நம் இஷ்டம் போல காற்றடிப்பதில்லை. இப்படி ஒரு சாதாரணமான விடயத்திற்கே வாகனத்தை தயாரித்தவரின் வழிகாட்டல் தேவைப்படுகிறது என்றால், எண்ணற்ற சிக்கல்களும் நுட்பமும் நிறைந்த மனிதன் என்ற இந்த இயந்திரத்திற்கு அதை உண்டாக்கியவனின் வழிகாட்டல் தேவையில்லை என்று எண்ணுவது பகுத்தறிவாகுமா? நாம் சொந்தம் கொண்டாடும் ஒரு பொருளையே நம் விருப்பப்படி உபயோகிப்பது சரியல்ல எனும்போது நமக்கு இரவலாகத் தரப்பட்ட பொருளை அவ்வாறு பயன்படுத்த முடியுமா? சிந்தியுங்கள்.




## 2. இறை வழிகாட்டலின்றி அமையாது மனித வாழ்க்கை!

ஏதேனும் ஒரு பெரிய நகரத்தில் இரண்டு மணி நேரத்திற்கு சாலை விதிகளை யாரும் பேணவேண்டியதில்லை, எவ்வளவு பெரிய ஆக்சிடென்டை நீங்கள் அந்த இரண்டு மணி நேரத்தில் செய்தாலும் உங்கள் மீது எந்த வழக்கும் போடப்படமாட்டாது என்ற அறிவிப்பு செய்யப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம்...... என்ன நடக்கும்?

விளைவை நாம் அனைவரும் அறிவோம். பலரும் பயம் காரணமாக வாகனத்தையே வெளியில் எடுக்க மாட்டோம். சாலையில் நடமாட மாட்டோம். எவ்வளவுதான் அவசர வேலை இருந்தாலும் அந்த இரண்டு மணி நேரம் முடியக் காத்திருந்து விட்டே புறப்படுவோம். ஆம்புலன்ஸ் உட்பட எதுவும் வீதியில் ஓடாது! அனைத்துமே ஸ்தம்பித்துவிடும்! இது எதை நமக்கு உணர்த்துகிறது?

சட்டம், ஒழுங்கு, பரஸ்பர புரிதல் போன்றவை இல்லையென்றால் ஒரு சமூகம் மட்டுமல்ல ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஒன்றிணைந்து வாழ்வதும் அந்த வாழ்க்கை நீடிப்பதும் சாத்தியமில்லை என்பதைத்தானே

அறிகிறோம். எனவே முதல் மனித ஜோடி இங்கு வாழத் துவங்கிய நாள் முதலே அவர்களுக்கு ஒழுங்கும் வாழ்க்கை வழிகாட்டுதல்களும் அவற்றை பின்பற்ற வேண்டியதன் அவசியமும் கற்பிக்கப்பட்டு இருக்கவேண்டும் என்பது திண்ணம். மாறாக சட்டம் ஒழுங்கு வரையறைகள் என்பவை செயல்களின் விளைவுகளைக் கண்டு பாடம் படித்தல் (trial and error) செய்தபின் உருவானவை அல்ல என நாம் புரிந்து கொள்ளலாம். ஆக ஆதி முதலே மனிதர்களைப் படைத்தவன் அவர்களுக்கு இவற்றைக் கற்றுக் கொடுத்ததனால்தான் உலகம் உயிர்வாழ்கிறது!

ஒரு மனிதன் கடவுளை ஏற்பதையும் மறுப்பதையும் பொறுத்து அவனது நடத்தையும் செயல்பாடுகளும் குணங்களும் அமைகிறது. அதாவது தன் வினைகளுக்கு மறுமையில் கேள்விக் கணக்கும் விசாரணையும் உள்ளது என்ற உணர்வு வளர்க்கப்பட்டால் அங்கு ஒழுங்கும் (order) கட்டுப்பாடும் (discipline) உண்டாகும். இறையச்சம் குறையும்போது அல்லது அறவே இல்லாமல் ஆகும்போது அங்கு தான்தோன்றித்தனமும் குழப்பமும் மட்டுமே பெருகும். இப்படிப்பட்ட கட்டுப்பாடற்ற போக்கு ஆரம்பத்தில் இருந்தே இருந்திருக்குமானால் உலகம் என்றோ அழிந்துபோயிருக்கும்.

## 3. சட்டம் ஒழுங்கு உருவாக இறைவழிகாட்டுதல் அவசியம்

மனிதர்களிடையே நிறம், இனம், நாடு, மொழி போன்ற பல்வேறு வேற்றுமைகள் இயல்பானவை. ஒருவருக்குப் பாவமாகப்படுவது மற்றவர்களுக்குப் பாவமாகப் படுவதில்லை. அதுபோலவே ஒரு சாராருக்குப் புண்ணியமாகப் படுவது மற்றவர்களால் பாவமாகவோ அருவருக்கத்தக்கச் செயலாகவோ எண்ணப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு சமூகமாக வாழ்வதற்கு அங்கு சட்டங்களும் ஒழுங்குகளும் நிலைநாட்டப்படவேண்டும். அதற்கு சரி எது தவறு எது, நியாயம் எது அநியாயம் எது, பாவம் எது புண்ணியம் எது என்பதைப் பிரித்தறிவிக்கும் ஒரு பொதுவான அளவுகோல் இருந்தால்தான் சட்டங்களை இயற்ற முடியும். இப்பிரபஞ்சத்தில் மிகவும் அற்பமான அறிவும் ஆயுளும் கொண்ட மனிதர்கள் சொந்த அறிவை அல்லது அனுபவத்தை வைத்துக்கொண்டு இயற்றும் சட்டங்கள் ஒருதலைப்பட்சமானதாகவும் குறைகள் உள்ளவையாகவும் இருக்கும்.

மாறாக இவ்வுலகையும் அதில் உள்ளவற்றையும் படைத்து பரிபாலித்து வரும் இறைவனுக்கு மட்டுமே தனது படைப்பினங்கள் பற்றிய முழுமையான அறிவு உள்ளது. மனிதனுக்கும் மனித குலத்துக்கும் மட்டுமல்ல மற்ற அனைத்து ஜீவராசிகளுக்கும் படைப்பினங்களுக்கும் எது நல்லது எது கெட்டது என்பதை மிக மிகப் பக்குவமாக அறிபவன் அந்த இறைவன் மட்டுமே. அவன் வழங்கும் அளவுகோல் அல்லது சட்டங்கள் மட்டுமே மிகவும் உன்னதமானவை. எனவே இந்த விடயத்திலும் இறைவழிகாட்டுதல் மிகவும் அவசியமானது என்பதை அறியலாம்

- **மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அறிவுரை உங்களிடம் திண்ணமாக வந்திருக்கிறது. இது இதயங்களில் உள்ள நோய்களைக் குணப்படுத்தக்கூடியதாகவும், தன்னை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களுக்கு வழி காட்டக்கூடியதாகவும், ஓர் அருட்கொடையாகவும் திகழ்கின்றது. (திருக்குர்ஆன் 10:57)**

# படைத்தவன் வழங்கும் கையேடுகள்!

ஏதேனும் ஒரு அதிநவீன இயந்திரத்தை பெரும் விலைகொடுத்து வாங்குகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த இயந்திரத்திலிருந்து உரிய முறையில் நாம் பயனடைய வேண்டுமானால் அதற்கு அதன் பயன்பாடு பற்றிய நல்ல செயல்முறை விளக்கமும் (demo), தொடர்ந்து அந்த இயந்திரத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைக் கற்று தரும் கையேடும் (Instruction Manual) இன்றியமையாதவை என்பதை நாம் அறிவோம். அந்த வகையில் நம்மில் ஒவ்வொருவருக்கும் வாய்த்துள்ள விலை மதிக்க முடியாத பொக்கிஷமாக அமைந்திருப்பவை நம் உடலும் உள்ளமும். இவ்வுலகையும் அதில் உள்ளவற்றையும் அதிபக்குவமாகப் படைத்தவன் நமகென்று ஒரு வழிகாட்டுதலைத் தராமல் “அம்போ“ என்று விட்டுவிடுவானா?

இந்த மாபெரும் பிரபஞ்சத்தையும் அதில் உள்ளவற்றையும் மனிதனுக்கு பயனளிப்பதற்கென்றே படைத்து பரிபாலித்து வரும் அந்த அளவற்ற அருளாளன் மனிதனுக்கு நேரிய முறையில் வழிகாட்டுவதற்காக மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளான். நமது படைப்பின் நோக்கம், நாம் இங்கு எவ்வாறு வாழவேண்டும், இந்த வாழ்க்கைக்குப் பின் நாம் எங்கே போகிறோம் என்பன போன்ற விடயங்களைக் கற்றுத்தரவும் நமக்கு வாழ்க்கை முன்மாதிரிகளாக விளங்கவும் வேண்டி மனிதர்களில் புனிதர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தன் தூதர்களாக நியமித்து அனுப்பியுள்ளான். அந்த சிறந்த மனிதர்களே இறைதூதர்கள் என்று அறியப்படுகின்றனர். இந்த இறைதூதர்கள் மூலமாக நேர்வழியை கற்று தரும் கையேடுகளை வழங்கினான். இந்த கையேடுகளே இறை வேதங்கள்.



## இறுதியான (latest) கையேடு

நோவா (Noah), ஆபிரகாம் (Abraham), தாவுது (David), சாலமன் (Solomon), மோசஸ் (Moses) மற்றும் இயேசுகிறிஸ்து (Jesus Christ) போன்றோர் இறைவனால் அனுப்பப்பட்ட இறைத்தூதர்களில் சிலர்.

**● ”அல்லாஹ்வை வணங்குங்கள்! தீய சக்திகளை விட்டு விலகிக் கொள்ளுங்கள்!” என்று ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு தூதரை அனுப்பினோம். (அல்குர்ஆன் 16:36)**

நபிகளாருக்கு முன்னர் ஒரு லட்சத்து *24* ஆயிரம் இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டுள்ளனர் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத், தப்ரானி) இவர்களில் *25* பேர் பெயர் மட்டுமே திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தியா சைனா போன்ற நாடுகளுக்கும் இறைத்தூதர்கள் வந்திருக்கின்றனர். அவர்கள் யார் யார் என்ற தகவல் நமக்குக் கிடைப்பதில்லை.

அந்த வரிசையில் இறுதியாக இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர்தான் முஹம்மது நபி அவர்கள். அவர்கள் மூலமாக இறைவன்

அருளிய வேதம்தான் திருக்குர்ஆன். திருக்குர்ஆன் ஒரு குறிப்பிட்ட நாட்டினருக்கோ மொழியினருக்கோ சமூகத்துக்கோ அல்லது முஸ்லிம் களுக்கு மாத்திரமோ அருளப்பட்டது அல்ல. மாறாக அகில உலக மக்களுக்கும் பொதுவாக அவர்களைப் படைத்தவனால் அருளப்பட்ட வழிகாட்டி நூலாகும். இதை ஏற்பது மோட்சத்தைப் பெற்றுத்தரும். மறுப்பது இறைவனின் தண்டனையைப் பெற்றுத்தரும். இதோ இவ்வுலகின் அதிபதி தனக்கே உரிய உறுதியான தோரணையில் இறுதி வேதத்தில் அறிவிப்பதைப் பாருங்கள்:

● **இது, (இறைவனின்) திருவேதமாகும் இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. பயபக்தியுடையோருக்கு (இது) நேர்வழிகாட்டியாகும். (திருக்குர்ஆன் 2:2)**

● **இது (குர்ஆன்)தான் நேர்வழிகாட்டியாகும். எவர்கள் தம்முடைய இறைவனின் வசனங்களை நிராகரித்து விட்டார்களோ, அவர்களுக்கு நோவினை மிகுந்த கடினமான வேதனையுண்டு. (திருக்குர்ஆன் 45:11)**

நம் வாழ்க்கையின் நோக்கத்தை நமக்கு கற்று தருவது மட்டுமல்லாமல், இந்த உலகில் நிம்மதியாக, சந்தோஷமாக வாழ, திருக்குர்ஆன் ஒரு அற்புதமான வாழ்க்கை திட்டத்தை முன்வைக்கிறது. வறுமை, பெருகி வரும் குற்றங்கள், வன்முறை, ஊழல் இப்படி எத்தனையோ பிரச்சினைகள் மனித சமுதாயத்தை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. இந்த சமுதாய பிரச்சனைகளுக்கும், தனி மனித பிரச்சனைகளுக்கும் இறைவன் தரும் தீர்வுகளைத் தாங்கி நிற்கிறது திருக்குர்ஆன் என்பதை நீங்கள் அறிவீர்களா?

எதையும் கண்மூடித்தனமாக நம்பாமல், திருக்குர்ஆனை ஆராய்ந்து படித்து, சிந்திக்க இறைவன் முழு மனித சமுதாயத்திற்கும் அறைகூவல் விடுக்கிறான்.

● **"அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா, (இது) இறைவன் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால் இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்." (திருக்குர்ஆன் 4:82)**

# வாசகர் எண்ணம்

● பயங்கரவாதம் பற்றிய கட்டுரைச்செய்திகள் ஏற்கனவே பலருக்கும் தெரிந்தவைகள்தான். என்றாலும் முறைப்பட - மனம்கொள்ளும் வகையில் - தொகுத்துச் சொன்ன பாங்கு மிக அருமை. ஆயுத முதலைகள் பற்றிய செய்தியும் - சிந்திக்க வைக்கும் ஒன்று. - எம். பழனிச்சாமி, நாகமலை, மதுரை

● இன்றோடு நற்செய்திமலர் வர ஆரம்பித்து ஒரு வருடம் ஆகிவிட்டது. தொடர்ந்து வாசிக்க ஆர்வமாக உள்ளேன். தவறாமல் அனுப்புங்கள்

- ஸ்ரீனிவாசன் பழனியப்பன், கும்பகோணம்.

● எந்த ஒரு நூலையும் சந்தர்ப்ப சூழல் ஒப்பீடு (context) இல்லாமல் புரிய முற்பட்டால் அது தவறான முடிவுகளுக்கு வழி வகுக்கும் என்பதை உங்கள் இதழ் மூலம் புரிந்து கொண்டேன். மாற்றுமத மக்களிடையே இஸ்லாத்தைப் பற்றி தவறான புரிதல்கள் ஏற்படுவதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

- ஏ.சி.பிரபாகரன் , அல்சூர், பெங்களூரு

# வான்மறை வந்திறங்கிய வரலாற்றுச் சூழல்

முஸ்லிம் அல்லாத அன்பர்கள் பலர் திருக்குர்ஆன் என்பது முஹம்மது நபி(ஸல்) அவர்களால் எழுதப்பட்டது என்று இன்றும் நம்பி வருகிறார்கள். மாறாக முஹம்மது நபியவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்தார் என்பதும் இந்த அகிலத்தைப் படைத்து பரிபாலித்து வரும் ஏக இறைவனால் அவர்களுக்கு ஒலிவடிவில் அருளப்பட்ட இறை வசனங்களின் தொகுப்பே திருக்குர்ஆன் என்பதுமே உண்மையாகும்.

● **இவ்வேதம் யாவரையும் மிகைத்தோனும் ஞானம் மிக்கோனுமாகிய அல்லாஹ்விடமிருந்தே இறக்கியருளப்பட்டது. (திருக்குர்ஆன் 46:2)**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போது எவ்வாறு இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்கள் என்பதையும், எவ்வாறு திருக்குர்ஆன் அருளப்பட்டது என்பதை சுருக்கமாகக் காண்போம்.

## முஹம்மது நபிகளார்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயற்பெயர் முஹம்மத். இவர்கள் இன்றைய சவூதி அரேபியாவில் உள்ள மக்கா எனும் நகரத்தில் கி.பி. 570ஆம் ஆண்டு பிறந்தார்கள்.

தாயின் வயிற்றில் இருக்கும்போது தந்தையை இழந்து, சிறு வயதிலேயே தாயையும் இழந்தார்கள். பெற்றோரை இழந்த பின் அவர்களின் தந்தைவழிப் பாட்டனார் அப்துல் முத்தலிப் என்பார் தமது பொறுப்பில் அவர்களை எடுத்து வளர்த்து வந்தார்.

அவரது மரணத்திற்குப் பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பெரிய தந்தை அபூதாலிபுடைய பொறுப்பில் வளர்ந்து இளமைப் பருவத்தை அடைந்தார்கள்.

சிறுவராக இருந்தபோது ஆடு மேய்த்திருக்கிறார்கள். ஓரளவு விபரம் தெரிய வந்த பிறகு தமது பெரிய தந்தையோடு சேர்ந்து வியாபாரமும் செய்திருக்கிறார்கள்.

இந்த வியாபாரத்தின் காரணமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல வெளியூர்ப் பயணங்களை மேற்கொண்டார்கள்.

25வது வயதில் தம்மைவிட மூத்தவரான கதீஜா என்ற விதவையை மணந்தார்கள்.

அவரும் அன்றைய சமுதாயத்தில் பெரிய வசதி படைத்தவராக இருந்ததால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது 25 ஆம் வயதிலேயே மிகவும் வசதி படைத்தவராக மாறினார்கள்.

## திருக்குர்ஆன் அருளப்பட்ட காலகட்டம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த மக்கள் பலகடவுள் நம்பிக்கையுடையோராக இருந்தார்கள்.

ஏராளமான மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்தனர்!

- கடவுளை நிர்வாணமாக வழிபட்டனர்!

- பெண் குழந்தைகள் பிறப்பதைக் கேவலமாகக் கருதியதுடன் பெண் குழந்தை பிறந்தால் அதை உயிருடன் புதைப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்!
- குடம் குடமாக மதுபானங்கள் அருந்தினார்கள்!
- காமக் களியாட்டத்தில் மூழ்கித் திளைத்தனர்!
- பெண்களை ஆடு மாடுகளைப் போன்று கருதினார்கள்!
- தந்தை இறந்து விட்டால் தந்தையின் மனைவியை மகன் பயன்படுத்திக் கொள்வது சர்வசாதாரணமாக இருந்தது!
- சாதி வேற்றுமையும் தலை விரித்தாடியது!
- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தக் குலத்தில் பிறந்தார்களோ அந்தக் குலம் - குறைஷிக் குலம் - மிகவும் உயர்ந்த குலம் எனவும் மற்றவர்கள் அற்பமானவர்கள் எனவும் விதி செய்திருந்தனர்!
- அரபுமொழி பேசுவோர் மட்டுமே மனிதர்கள் என்றும், மற்றமொழி பேசுவோர் அஜமிகள் (கால்நடைகள்) என்றும் கூறும் அளவுக்கு அவர்களிடம் மொழிவெறி மிகைத்திருந்தது.
- மனித உயிர்களைக் கொன்று குவிப்பது மிகச் சிறிய குற்றமாகக் கூட அவர்களுக்குத் தோன்றவில்லை. அற்பமான சண்டைகளுக்காகக் கூட கொலை செய்வார்கள்!
- தமது குடும்பத்தில் ஒருவர் கொல்லப்பட்டால் கொலையாளியைப் பழி வாங்காமல் விடமாட்டார்கள். அவரைத் தம்மால் பழி வாங்க முடியாவிட்டால் தமது வாரிசுகளுக்கு வலியுறுத்திச் செல்வார்கள். பத்து தலைமுறைக்குப் பிறகாவது கொலையாளியின் குடும்பத்தில் ஒருவனைக் கொன்று கணக்குத் தீர்ப்பார்கள்.

## தீர்வைத் தேடிய நபிகளார்

இத்தகைய நிலையைக் கண்டு மனம் வெறுத்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சமுதாயத்தின் நடவடிக்கைகள் சரியானவை அல்ல என்று திட்டவட்டமாக உணர்ந்தார்கள்.

எனவே தமது நாற்பதாம் வயதில் மக்காவிற்கு வெளியே உள்ள “ஹிரா“ எனும் குகைக்குச் சென்று தனிமையில் சிந்திப்பதை வழக்கமாகக் கொள்ளலானார்கள்.

பல நாட்களுக்குத் தேவையான உணவைத் தயார் செய்து கொண்டு குகையிலேயே தங்கி விடுவார்கள். உணவு முடிந்ததும் வீட்டுக்கு வந்து உணவு தயாரித்துக் கொண்டு மறுபடியும் குகைக்குச் சென்று விடுவார்கள்.

இவ்வாறு குகையில் இருந்தபோது வானத்தையும், பூமியையும் தொட்டுக் கொண்டிருக்கும் அளவுக்கு பிரம்மாண்டமான தோற்றத்தில் ஒருவர் நிற்பதைக் கண்டார்கள். அவர் ஜிப்ரீல் எனும் வானவர் ஆவார்.

அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறுகக் கட்டியணைத்து “ஓது“ எனக் கூறியபோது தமக்கு ஓதத் தெரியாது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மீண்டும் அவர் “ஓது“ எனக் கூற அப்போதும் தெரியாது என்று பதிலளித்தார்கள். பின்னர் அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை

இறுகக் கட்டியணைத்து கீழ்கண்ட வசனங்களைக் கற்றுக் கொடுத்தார்கள்:

**● (முஹம்மதே!) படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை கருவுற்ற சினை முட்டையிலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் கண்ணியமானவன். அவனே எழுது கோலால் கற்றுத் தந்தான். அறியாதவற்றை மனிதனுக்குக் கற்றுத் தந்தான். (திருக்குர்ஆன் 96:1-5)**

இப்படித்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைத்தூதராக நியமிக்கப்பட்டு முதல் செய்தியும் அருளப்பட்டது. ஆனாலும் நபிகள் நாயகம் அதிர்ச்சியடைந்து அச்சம் கொண்டார்கள். தமது மனைவியிடம் வந்து இதைக் கூறினார்கள்.

## ஆறுதல் அளித்த துணைவியார்

”இறைவன் உங்களைக் கைவிடமாட்டான் மக்களுக்கு நீங்கள் உதவுகிறீர்கள் ஏழைகளுக்கு வாரி வழங்குகிறீர்கள் உறவினர்களை உபசரிக்கிறீர்கள் எனவே அல்லாஹ் உங்களைக் கைவிடமாட்டான்“ என்று அவர்களின் மனைவி கதீஜா அவர்கள் ஆறுதல்படுத்தினார்கள்.

ஆயினும் தமது ஆறுதல் போதிய பயனளிக்காததைக் கண்ட கதீஜா அவர்கள் தமது உறவினர் வரகாவிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைத்துச் சென்றார்கள். இவர் முந்தைய வேதங்களைக் கற்றறிந்து, கிறித்தவ மார்க்கத்தையும் தழுவியிருந்தார்.

”நீர் இறைவனின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளீர் உம்மை உமது சமுதாயத்தினர் ஊரை விட்டே வெளியேற்றும் நிலையை அடைவீர் ஏனெனில் இறைத்தூதர்கள் பிரச்சாரம் செய்யும்போது இதுதான் நடந்துள்ளது” என்று அவர் கூறி நம்பிக்கையூட்டினார். (நூல் : புகாரி)

இப்படி ஆரம்பித்த இறைச்செய்தியின் வருகை சிறிது சிறிதாகச் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப 23 ஆண்டுகள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. 23 ஆண்டுகளில் சிறிது சிறிதாக அருளப்பட்ட இறைச் செய்தியின் தொகுப்பே திருக்குர்ஆன்.

**வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:**

**1. வங்கி மூலம் :**

**House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432**

**IFScode: ICIC0000169**

2. **PAYTM மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல் அனுப்பவும்.**

# வந்த நாள் முதல் வான்மறையின் பாதுகாப்பு

இன்று வாழும் மக்களின் இம்மை மற்றும் மறுமை நலனுக்கு அவர்களைப் படைத்த இறைவன் வழங்கிய இறுதியான உறுதியான கையேடுதான் திருக்குர்ஆன் என்ற இறைமறை. வந்த நாள் முதல் இந்த நாள் வரை மட்டுமல்ல இனி இவ்வுலகம் அழியும் நாள் வரை அதன் பாதுகாப்பை இறைவனே ஏற்றுக் கொண்டுள்ளான் என்பதை அவனே உறுதிபடக் கூறுகிறான்:

- **நிச்சயமாக நாமே இந்த நினைவூட்டலை (குர்ஆனை) இறக்கியிருக்கிறோம். நிச்சயமாக நாமே இதைப் பாதுகாப்போம். (திருக்குர்ஆன் 15:9)**

இறங்கிய போதிருந்தே இவ்வேதத்தின் பாதுகாப்புக்காக என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை நாம் அறிய முற்படுவோம்:

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவ்வப்போது திருக்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டவுடன் அதை அவர்கள் தமது உள்ளத்தில் பதிவு செய்து கொள்வார்கள். அதாவது வானவர் ஜிப்ரீல் வந்து தனக்கு முன் ஓதிக் காட்டும் இறைவசனங்களை கவனமாகக் கேட்டு அவற்றை தம் உள்ளத்தில் பதிவு செய்து கொள்வதற்கு அவர்கள் ஆரம்பத்தில் மிகுந்த சிரத்தை எடுக்கலானார்கள். அது தேவையில்லை என்று இறைவன் அறிவுறுத்தினான்.

- **(நபியே!) வஹீ மூலம் அறிவிக்கப்படுபவை தவறிவிடுமோ என பயந்து அதற்காக நீர் அவசரப்பட்டு உம் நாவை அசைக்காதீர்.. அதை நினைவில் நிறுத்தச் செய்வதும், ஓதும்படிச் செய்வதும் நமது பொறுப்பாகும். ஆகையால் நாம் இதனை ஓதிக் காட்டும்போது அவ்வாறு ஓதிக்காட்டுவதை நீர் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருக்கவும். பின்னர், இதன் கருத்தை விளக்குவதும் நமது பொறுப்பே ஆகும். (திருக்குர்ஆன் 75: 16.- 19.)**

எனவே வானவர் ஜிப்ரீல் அதிகமான வசனங்களைக் கூறினாலும் ஒலிநாடாவில் பதிவது போல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் அப்படியே அவை பதிவாகி விடும்.

இறைவன் தனது தூதராக அவர்களை நியமித்ததால் அவர்களுக்கு இந்தச் சிறப்பான தகுதியை வழங்கியிருந்தான். திருக்குர்ஆன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் இவ்வாறு பாதுகாக்கப்பட்டது.

## நபித்தோழர்களின் உள்ளங்களில்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் எந்தச் சமுதாயத்தைச் சந்தித்தார்களோ அந்தச் சமுதாயம் எழுத்தறிவில்லாத சமுதாயமாகவும், அதே நேரத்தில் மிகுந்த நினைவாற்றலுடைய சமுதாயமாகவும் இருந்தது. எழுதவும், படிக்கவும் தெரியாத அந்தச் சமுதாய மக்களில் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு அவ்வப்போது அருளப்பட்ட வசனங்களை ஓதுவார்கள். உடனேயே

அம்மக்கள் அவற்றை மனனம் செய்து கொள்வார்கள்.

திருக்குர்ஆன் ஒட்டுமொத்தமாக ஒரு நாளிலோ, குறுகிய காலத்திலோ அருளப்பட்டிருந்தால் அதை அந்தச் சமுதாயத்திற்கு மனனம் செய்து கொள்ள இயலாமல் போயிருக்கலாம். ஆனால் 23 ஆண்டுகளில் இந்தத் திருக்குர்ஆன் சிறிது சிறிதாக அருளப்பட்டிருப்பதால் மனனம் செய்வது மிகவும் எளிதாகவே இருந்திருக்கிறது.

### தொழுகைகளில் ஓதுதல்

மேலும் மனனம் செய்ததை மறந்து விடாமல் இருப்பதற்காக இஸ்லாத்தில் சிறப்பான ஒரு ஏற்பாட்டையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்தார்கள். "முஸ்லிம்கள் தினமும் நடத்துகின்ற ஐந்து நேரத் தொழுகைகளிலும், தாமாக விரும்பித் தொழுகின்ற தொழுகைகளிலும் திருக்குர்ஆனின் சில பகுதிகளையாவது ஓதியாக வேண்டும்" என்பதுதான் அந்த ஏற்பாடு.

திருக்குர்ஆனை மனனம் செய்த முஸ்லிம்கள் அதை மறந்து விடாமல் இருக்க இந்த ஏற்பாடு உதவியாக இருந்தது. மேலும் மனனம் செய்யாதவர்களும் தொழுகையில் ஓத வேண்டும் என்பதற்காக திருக்குர்ஆனை மனனம் செய்யும் நிலை ஏற்பட இது உதவியாக இருந்தது.

### திருக்குர்ஆனை புதுப்புது மக்களுக்குக் கற்றுக் கொடுத்தல்

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு அருளப்பட்ட வசனங்களைச் சிரத்தை எடுத்து மக்களிடத்திலே கொண்டு போய்ச் சேர்த்தார்கள். எங்கெல்லாம் இஸ்லாத்தை ஏற்றவர்கள் இருந்தார்களோ அவர்களுக்கு திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்காக சில தோழர்களை அனுப்பி வைத்தார்கள். உள்ளங்களில் திருக்குர்ஆன் பாதுகாக்கப்படுவதற்கு இது மேலும் உறுதுணையாக அமைந்தது.

### வானவர் மூலம் உறுதிப் படுத்தல்

● இது தவிர ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு முறை ஜிப்ரீல் என்ற வானவர் வந்து அருளப்பட்ட வசனங்களைத் திரும்ப நினைவுபடுத்தி, முறைப்படுத்தி, வரிசைப்படுத்திச் செல்வார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்த கடைசி வருடத்தில் ஜிப்ரீல் அவர்கள் இரண்டு முறை வந்து இவ்வாறு தொகுத்து வழங்கியதாக நபிவழித் தொகுப்பு நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பார்க்க புகாரி 6, 1902, 3220, 3554, 4998)

இவ்வாறாக திருக்குர்ஆன் மனிதர்களுடைய உள்ளங்களில் பாதுகாக்கப்பட்டது. ஏராளமான தோழர்கள் திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்தார்கள்.

### எழுத்து வடிவிலும்

கல்வியாளர் உள்ளங்களில் திருக்குர்ஆனைப் பாதுகாக்க ஏற்பாடு செய்ததுடன் நின்று விடாமல் அந்தச் சமுதாயத்தில் எழுதத் தெரிந்திருந்தவர்களை அழைத்து தமக்கு அவ்வப்போது வருகின்ற இறைச் செய்தியை உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிவு செய்வார்கள்.

இவ்வாறு பதிவு செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவர்களில் அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலீ (ரலி), முஆவியா (ரலி), அபான் பின் ஸயீத் (ரலி), காலித் பின் வலீத் (ரலி), உபை பின் கஅப் (ரலி), ஸைத் பின் ஸாபித் (ரலி), ஸாபித் பின் கைஸ் (ரலி) என்ற நபித்தோழர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்த எழுத்தர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லச் சொல்ல பேரீச்சை மரப்பட்டைகளிலும், வெண்மையான கல் பலகைகளிலும், பதனிடப்பட்ட தோல்களிலும், கால்நடைகளின் அகலமான எலும்புகளிலும் எழுதிக் கொள்வார்கள். அன்றைய சமுதாயம், இவற்றைத்தான் எழுதப்படும் பொருட்களாகப் பயன்படுத்தி வந்தது.

# மனித மனங்களே பாதுகாப்புப் பெட்டகங்கள்

திருக்குர்ஆனின் உலகெங்கும் உள்ள பிரதிகளை நேரில் நீங்கள் பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென்றால் இன்று இணையம் மூலமாகவோ அல்லது ஒரு பொது நூலகத்தில் சென்றோ இதை நீங்கள் எளிதில் செய்ய முடியும். அவ்வாறு நீங்கள் பரிசோதிக்கும்போது முந்தைய வேதங்களையும் மற்றும் திருக்குர்ஆனையும் ஒப்பீடு செய்தால் நீங்கள் திருக்குர்ஆனின் ஒரு தனித்தன்மையை உணரலாம்.

● உலகில் இன்றுள்ள மற்ற மத வேதங்களின் மொழி பெயர்ப்புகளை மட்டுமே காணமுடிகிறது. அவற்றின் மூல வசனங்களைக் காண முடிவதில்லை. இதுதான் அவ்வேதத்தின் மூலம் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறப்படும் எதையும் நீங்கள் தேடினாலும் காணமுடியாது.

● ஆனால் திருக்குர்ஆனைப் பொறுத்தவரையில் இரண்டு விதமான பிரதிகளைக் நீங்கள் காண முடிக்கிறது. ஒன்று வெறும் அரபுமொழி மூலம் மாத்திரம் இடம்பெற்றுள்ள பிரதிகள். மற்றவை திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்புப் பிரதிகள். ஆனால் அவற்றில் அதன் அரபுமொழியில் உள்ள மூலமும் இடம்பெற்று இருக்கும். ஆக மூலவசனங்கள் அருளப்பட்ட நாள் முதல் இன்றுவரை வருடங்கள் 1440 ஆகியும் அட்சரம்பிசகாமல் அப்படியே பாதுகாக்கப் படுவதை நீங்கள் காணலாம்.

● அண்மையில் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டு இருந்த திருக்குர்ஆன் கையெழுத்துப் பிரதிகளை 'ரேடியோகார்பன்" பரிசோதனைக்கு உட்படுத்திய ஆராய்ச்சியாளர்கள், இது கி.பி. 568 மற்றும் 645-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கும் என 95.4 சதவீதம் அளவுக்கு துல்லியமாக கணித்துள்ளனர். (ஆதாரம்: http://www.birmingham.ac.uk/news/latest/2015/07/quran-manuscript-22-07-15.aspx ) (உள் அட்டையில் அதன் படத்தையும் அதற்கருகில் இன்றைய கம்ப்யூட்டர் பிரதியையும் ஒப்பீட்டுக்காக இடம்பெறச் செய்துள்ளோம். இரண்டும் அட்சரம் பிசகாமல் அப்படியே இருப்பதைக் காணலாம்.)

## அருளப்பட்ட காலம் முதலே தொடரும் பாதுகாப்பு

முஹம்மது நபியவர்கள் 40-ஆவது வயதில் இறைத்தூதராக ஆனது முதல் 63-ஆவது வயதில் மரணமடையும் வரை அவருக்கு அவ்வப்போது சிறிது சிறிதாக ஒலிவடிவில் அருளப்பட்ட வசனங்களின் தொகுப்பே திருக்குர்ஆன் என்பதை அறிவீர்கள்.

இறைவன் புறத்திலிருந்து வானவர் ஜிப்ரீல் இவ்வசனங்களை கொண்டு வந்து நபிகளாருக்கு ஓதிக் காட்டுவார்கள். தொடர்ந்து ஜிப்ரீலிடம் தான் செவியுற்ற வசனங்களை தனது தோழர்கள் முன் ஓதிக் காட்டுவார்கள். அவற்றை தோல்களிலும் எலும்புகளிலும் எழுதி வைத்துக் கொண்டனர் நபித்தோழர்கள். அது மட்டுமல்ல அவ்வசனங்களின் கவர்ச்சியில் தங்களைப் பறிகொடுத்த தோழர்கள் அவற்றை தொழுகையிலும் தொழுகைக்கு வெளியேயும் அடிக்கடி ஓதும் பழக்கமுடையோரானார்கள். அதாவது ஒலி வடிவிலேயே திருக்குர்ஆன் வசனங்கள் பிரபலமாகின.

## துணை போகும் கவிதை நயம்

உதாரணமாக ஏதேனும் பாடல்கள் திரைப்படங்கள் மூலமாகவும் அல்லாமலும் பிரபலமாகி விட்டால் அவை இயற்றப்பட்டு பற்பல வருடங்கள் கடந்தாலும் அவை இன்றும் அவ்வாறே பாடப்படுவதைக் காண்கிறோமல்லவா? ஒலிவடிவிலேயே அவை மக்களிடையே பிரபலாமானதுதான் அதற்குக்காரணம். அவ்வாறு ஒலிவடிவத்தில் பிரபலமான ஒரு கவிதையை அல்லது பாடலை பிற்காலத்தில் உள்ளவர்கள் மாற்ற முடிவதில்லை என்பது நாமறிந்ததே!

## தொடர்ந்த ஓதலின் மூலம் உறுதிப்படும் பாதுகாப்பு

திருக்குர்ஆனின் கவிதையும் உரையும் கலந்த நடை அன்றே மக்களிடையே பிரபலமாகியது. அரபி இலக்கியத்தில் இன்றும் ஒப்புவமையற்ற தரத்தில் திருக்குர்ஆன் உள்ளதை அரபு மக்கள் அறிவார்கள். மேலும் புண்ணியம் கருதியும் தொடர்ந்த ஓதலின் காரணமாகவும் பலரும் குர்ஆன் வசனங்களை மனப்பாடம் செய்தனர். குர்ஆன் என்ற வார்த்தையின் பொருளே 'ஓதப்படுவது' என்பதே! ஆம், அருளப்பட்ட நாள் முதல் இன்று வரை திருக்குர்ஆனை அதிகமதிகமாக ஓதிவருவது உலகெங்கும் முஸ்லிம்களின் பழக்கமாக உள்ளது.

உலகிலேயே மிக மிக அதிகமாக மூல மொழியில் ஓதப்பட்ட மற்றும் ஓதப்படும் நூல் திருக்குர்ஆன் மட்டுமே! குறிப்பாக ரமலான் மாதம் பகலில் விரதமிருந்து இரவில் நின்று தொழுவது இஸ்லாமிய கடமை என்பதை கேட்டிருப்பீர்கள். இரவில் நீண்ட நேர தொழுகைகளில் இமாமாக நிற்பவர் 30 நாட்களில் முழு குர்ஆனையும் ஓதி முடிப்பது வழக்கம். அந்த அளவுக்கு இமாம்கள் முழு குர்ஆனையும் மனப்பாடம் செய்திருப்பார்கள். அவ்வாறு முழுக் குர்ஆனையும் மனப்பாடம் செய்தவர்கள் ஆயிரக்கணக்கில் அன்றும் இருந்தார்கள். இலட்சக் கணக்கில் இன்றும் இருக்கிறார்கள். கோடிக் கணக்கில் நாளையும் இருப்பார்கள் (இன்ஷாஅல்லாஹ்)! இவ்வாறு முழுக் குர்ஆனும் ஒலி வடிவில் உலகெங்கும் உலா வருகிறது. மனித மனங்களிலேயே பாதுகாக்கவும் படுகிறது.

# இன்றைய இறைத்தூதர் யார்?

## ஒன்றே குலம் ஒருவனே இறைவன்

இறைவேதம் திருக்குர்ஆனில் நம் மனிதகுலம் ஒன்றே என்பதை நம்மைப் படைத்த இறைவனே உறுதிபட உரைத்து உலகளாவிய மனித சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவதைக் காணலாம்.

**● மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். திண்ணமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 49:13)**

அனைத்து மனித குலமும் ஆதித் தந்தை - ஆதித்தாயின் வழித்தோன்றல்களே அவர்களில் இருந்துப் பல்கிப் பெருகியவர்களே எனும்போது நமக்காக அருளப்பட்ட இறைமார்க்கமும் ஒன்றுதான். வெவ்வேறு காலகட்டங்களில் இப்பூமியின் வெவ்வேறு பாகங்களுக்கு வந்து சென்ற அனைத்து இறைத்தூதர்களும் அதே இறைவனால் அதே மார்க்கத்தை போதிப்பதற்காக அனுப்பப்பட்ட செம்மல்களே என்பதை நாம் அடிப்படையாக உணரக் கடமைப்பட்டுள்ளோம். எனவே அவர்கள் அனைவரையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். யாரையும் நிராகரிக்கக் கூடாது. அவர்கள் வேற்று நாட்டவர் அல்லது வேற்று மொழியினர் வேற்று காலத்தவர்கள் என்று கூறி புறக்கணிக்கவோ தரம் தாழ்த்தவோ இறைவிசுவாசிகளுக்கு அனுமதியில்லை. அனைத்து இறைத்தூதர்களும் நம்மவர்களே, அனைவரும் நமது மனித குடும்பத்துக்காக, நமது சகோதர சகோதரிகளை நேர்வழிப் படுத்த நமது இறைவனால் அனுப்பப்பட்ட சான்றோர் பெருமக்களே என்ற மனப்பாங்கோடு அவர்கள் அனைவரையும் மதிக்க வேண்டும்.

## யாரை நாம் பின்பற்ற வேண்டும்?

இறைத்தூதர்களின் வரிசையில் நம் மூதாதையருக்கு அனுப்பப் பட்டவர்களும் அடங்குவர், நம் நாட்டினருக்கு, நம் மொழியினருக்கு அனுப்பப்பட்டவர்களும் அடங்குவர். வேற்று நாட்டினருக்கு, வேற்று மொழியினருக்கு அனுப்பப்பட்டவர்களும் அடங்குவர். ஒரே கொள்கையையே அவர்கள் போதித்து இருந்தாலும் அந்தந்த காலகட்டங்களில் மக்களின் மனமுதிர்ச்சிக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு நடைமுறைச் சட்டங்களும் வணக்க வழிபாட்டு முறைகளும் அந்தந்த இறைத்தூதர்களால் போதிக்கப் பட்டன.

இன்று வாழும் நாம் மறுமையில் வெற்றி அடைய வேண்டுமானால் அல்லது மோட்சம் பெற வேண்டுமானால் இறைவன் யாரை நமக்காக அனுப்பியிருக்கிறானோ அவரையே நாம் பின்பற்றியாக வேண்டும். அதை விடுத்து நாம் நம் இனத்துக்கு அல்லது நம் நாட்டுக்கு அல்லது நம் மொழிக்கு அனுப்பப்பட்ட தூதரையோ அல்லது வேதத்தையோ மட்டுமே பின்பற்றுவோம் என்று பேசுவது பிரிவினை வாதமாகிவிடும். அவ்வாறு பேசினால் நஷ்டம் நமக்குத்தான். அதுவும் சாதாரண நஷ்டம் அல்ல - நிரந்தர நரகம் அது!

# இன்றைய இறைத்தூதரே முஹம்மது (ஸல்)

*முஹம்மது நபி அவர்களுக்கும் அவருக்கு முன் வந்து சென்ற இறைத்தூதர்களுக்கும் இடையே நாம் கண்கூடாக காணக்கூடிய ஒரு சில வேறுபாடுகளை நாம் சற்று ஆராய்ந்தாலே இன்றைய காலகட்டத்துக்காக அனுப்பப்பட்டவர் இவர்தான் என்பதை நாம் அறியமுடியும்.*

## அகில உலகுக்கும் பொதுவானவர்

*முந்தைய இறைத்தூதர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாடுகளுக்காகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயங்களுக்காகவோ அனுப்பட்டிருந்தார்கள். உதாரணமாக,*

● **இன்னும், ஆது கூட்டத்தாரிடம் அவர்களுடைய சகோதரர் ஹூதை (நபியாக அனுப்பி வைத்தோம்) அவர், "என் சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள் அவனையன்றி உங்களுக்கு வேறு நாயனில்லை - நீங்கள் (அவனுக்கு) அஞ்சி(ப் பேணி) நடக்க வேண்டாமா?" என்று கேட்டார். (திருக்குர்ஆன் 7:6).**

● **மத்யன் நகரவாசிகளிடம் அவர்களுடைய சகோதரராகிய ஷுஐபை (நம் தூதராக அனுப்பிவைத்தோம்) (திருக்குர்ஆன் 7:85.)**

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)*

## இஸ்ராயீலின் மக்களுக்காக ஏசு வந்தார்

*இறைத் தூதர்கள் வரிசையில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முன் வந்து சென்றவர் ஏசு என்றழைக்கப் படும் ஈஸா (அலை) அவர்கள். அவரும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை நோக்கித்தான் அனுப்பப் பட்டு இருந்தார்.*

● **அவர் (ஈஸா நம்முடைய) அடியாரே அன்றி வேறில்லை. அவருக்கு நாம் அருட்கொடையைச் சொரிந்து இஸ்ராயீலின் சந்ததியாருக்கு அவரை நல்லுதாரணமாக ஆக்கினோம். (திருக்குர்ஆன் 43:59)**

*ஏசுவும் இஸ்ராயீலின் மக்களை நோக்கி தனக்குப் பிறகு வரவிருக்கும் முஹம்மது நபியைப் பற்றி முன்னறிவிப்பும் செய்தார்கள்:*

● **மேலும், மர்யமின் குமாரர் ஈஸா: "இஸ்ராயீல் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை மெய்ப்பிப்பவனாகவும் எனக்குப் பின்னர் வரவிருக்கும் "அஹமது" என்னும் பெயருடைய தூதரைப் பற்றி நன்மாராயம் கூறுபவனாகவும் இருக்கும் நிலையில் அல்லாஹ்வின் தூதனாக உங்களிடம் வந்துள்ளேன்" என்று கூறிய வேளையை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!) (திருக்குர்ஆன் 61:6)**

## அகில உலகோருக்கும் தூதராக நபிகளார்

*ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதி இறைத்தூதராகவும் உலகம் முழுமைக்கும் பொதுவானவராகவும் அனுப்பப்பட்டார்கள். நாம் இன்று இவ்வுலகின் இறுதி காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.*

● **(நபியே!) நீர் கூறுவீராக: "மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன் வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியது, அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறுயாருமில்லை"**

(திருக்குர்ஆன் 7:158)

அன்றும் இன்றும் உள்ள தகவல் தொடர்பு வசதிகளை ஒப்பிட்டுப் பார்த்தாலே இந்த உண்மையை நாம் விளங்கிக் கொள்ள முடியும். அன்று ஊர்களுக்கும் நாடுகளுக்கும் இடையே தகவல் தொடர்பு இல்லாத நிலையில் வெவ்வேறு நாடுகளுக்கு வெவ்வேறு தூதர்கள் அனுப்பபட்டிருந்தனர். இன்றைய காலகட்டம் தகவல் தொடர்பு மிக விரிவடைந்த கால கட்டம். இங்கு பேசினால் உடனுக்குடன் உலகின் மறு மூலையில் கேட்கக் கூடிய அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழலில் இறுதி இறைத்தூதர் உலகம் முழுமைக்கும் பொதுவானவராக அனுப்பப் பட்டார்கள். இவருக்குப் பிறகு எந்த இறைத்தூதரும் வரப்போவதில்லை. இனி உலகம் அழியும் நாள் வரையும் இவர்தான் இறைவனின் தூதர் என்பதையும் திருக்குர்ஆன் கூறுகிறது:

- **(மக்களே!) முஹம்மத் உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையல்லர். ஆனால், அவர் அல்லாஹ்வின் தூதராகவும், இறைத்தூதர்களுக்கெல்லாம் இறுதி முத்திரையாகவும் இருக்கின்றார். அல்லாஹ் ஒவ்வொன்றையும் அறிந்தவனாக இருக்கின்றான். (திருக்குர்ஆன் 33:40)**

# பாதுகாக்கப்படும் இறைவேதம் மற்றொரு சான்று

முந்தைய இறைத்தூதர்கள் மூலம் அனுப்பப்பட்ட வேதங்கள் பிற்கால மக்களால் கூட்டப்படவோ குறைக்கப்படவோ செய்யப்பட்டுள்ளன. அருளப்பட்ட காலத்தில் கலப்படமின்றி தூய்மையான நிலையில் இருந்த அவ்வேதங்கள் இன்று மனித கரங்களால் மாசுபடுத்தப்பட்ட நிலையில் காணப் படுகின்றன. அதுவும் அவற்றின் மொழிபெயர்ப்புகளைத்தான் நாம் காண முடிகிறதே தவிர அவற்றின் மூல மொழி வசனங்களை நாம் எங்கும் காண முடிவதில்லை. அதுமட்டுமல்ல, அவை அருளப்பட்ட மொழிகளே இன்று பேச்சுவழக்கில் இல்லை என்பதெல்லாம் நிதர்சனமான உண்மைகள்.

ஆனால் இறுதித் தூதர் மூலமாக அனுப்பப்பட்ட திருக்குர்ஆன் பதினான்கு நூற்றாண்டுகள் கடந்தும் எந்த விதமான மாற்றங்களுக்கும் இரையாகாமல் அருளப்பட்ட மொழியிலேயே அட்சரம் பிசகாமல் அப்படியே உலகின் எல்லா மூலைகளிலும் கிடைக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. (இது முந்தைய கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளது)

## கலப்படமில்லாமல் காக்கப்படுதல்

இந்த வேதத்தில் நபிகள் நாயகத்தின் வார்த்தைகளோ மற்ற மனிதர்களின் வார்த்தைகளோ கலக்கவில்லையா? இல்லை, நிச்சயமாக இல்லை. எவ்வாறு எனில் நபிகள் நாயகம் அவர்களின் கூற்று மற்றும் அவர் செய்த செயல்கள் பற்றிய செய்திகள் ஹதீஸ் எனப்படும் நூல்களாக தனித்து தொகுக்கப் பட்டுள்ளன. இவை இறைவாக்குகளோடு கலக்கவில்லை. அரபி இலக்கியத்தில் திருக்குர்ஆனும் ஹதீஸும் வெவ்வேறு இலக்கியத் தரத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. இரண்டும் ஒன்றோடு ஒன்று கலவாமல் தனித்தனியாகவே விளங்குகின்றன.

# வணங்கப்படாத இறைத்தூதர் - இதும் ஒரு சான்று!

இறுதித் தூதருக்கு முன்னர் வந்த இறைத்தூதர்களை அவர்களது மறைவுக்குப் பின்னர் அவர்களுக்காக நினைவுச் சின்னங்கள் என்ற பெயரில் உருவப்படங்களையும் சிலைகளையும் உருவாக்கி பின்னர் அவற்றையே கடவுளாக பாவித்து மக்கள் வழிபாடு செய்யத் துவங்கினர். இதற்கு இறுதித் தூதருக்கு முன் வந்த ஏசு நாதரும் விலக்கல்ல. அவருக்கும் இன்று மக்கள் படம் வைத்து சிலை வைத்து வழிபடுவதை நாம் காண்கிறோம்.

ஆனால் இறுதித் தூதர் முஹம்மது நபி அவர்கள் வந்து சென்ற பின் 14 நூற்றாண்டுகள் ஆகியும் இப்பூமியின் மேற்பரப்பின் மீது எங்காவது அவருடைய உருவப்படத்தையோ சிலையையோ பார்த்திருக்கிறீர்களா? இன்று அவரை உயிருக்குயிராக நேசித்து அவரை முன்மாதிரியாக பின்பற்றுவோர் கோடிக்கணக்கில் உலகெங்கும் இருந்தும் எங்குமே அவரது உருவப்படத்தைக் காணமுடியவில்லை என்றால் என்ன பொருள்? அவர் போதித்த ஓரிறைக் கொள்கை மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதைத்தானே அது காட்டுகிறது? படைத்தவன் மட்டுமே வணக்கத்துக்கு உரியவன் என்ற அவரது கொள்கை முழக்கம் இன்றும் ஓங்கி ஒலிக்கிறது என்பதைத் தானே காட்டுகிறது!

**என்னைக் கடவுளாக்கி விடாதீர்கள் என்றார்**

அவர் தனது மரணப் படுக்கையில் இருக்கும் போதும் மக்களை நோக்கி, "மக்களே ! எனது மரணத்துக்குப் பின் எனது சமாதியை விழா நடக்கும் இடமாக மாற்றி விடாதீர்கள். ஏனெனில் முந்தைய இறைத்தூதர்கள் விஷயத்தில் மக்கள் அவ்வாறு செய்து அவர்களை கடவுள்களாக்கி விட்டது போல் என்னைக் கடவுளாக்கி விடாதீர்கள்" என்று எச்சரித்தார்.

இன்றும் அவரது சமாதி சவுதி அராபியாவில் மதீனா நகரில் உள்ளதை அறிவீர்கள். ஆனால் யாரும் அங்கு சென்று "நபிகள் நாயகமே, எனக்கு இதைக் கொடுங்கள் அல்லது அதைக் கொடுங்கள்" என்று பிரார்த்திப்பதை நீங்கள் பார்க்க முடியாது.

அவரது வாழ்நாளில் கூட அவருக்கு மரியாதை செய்யும் நிமித்தமாக காலில் விழப் போனவர்களை மட்டுமல்ல, தனக்காக பிறர் எழுந்து நிற்பதைக் கூட அவர்கள் தடை செய்தார்கள். "யாருக்கேனும் தனக்காக பிறர் எழுந்து நின்று மரியாதை செய்வது சந்தோஷத்தை அளிக்குமானால் அவர் செல்லுமிடம் நரகம் என்பதை அறிந்து கொள்ளட்டும்" என்று மக்களுக்கு உபதேசித்து சுயமரியாதைக்கு இலக்கணம் வகுத்துச் சென்றார்.

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore. Registered News paper in India No. KARTAM/2007/28173

# அகிலத்தாருக்கு அழகிய முன்மாதிரி

இறைத்தூதர்கள் அனைவரும் எந்த மக்களுக்காக அனுப்பப்பட்டார்களோ அந்த மக்களுக்கு வாழ்க்கை முன்மாதிரிகளாகத் திகழ்ந்தார்கள். முந்தைய இறைத்தூதர்களின் வாழ்க்கை வரலாறுகள் அல்லது வாழ்க்கை முன்மாதிரிகள் முறைப்படி பதிவு செய்யப்படாத நிலையை நாம் இன்று காண்கிறோம். இறுதித்தூதர் முஹம்மது நபியவர்கள் இறுதி நாள் வரை இப்பூமியில் வாழப் போகும் அனைத்து மனிதர்களுக்கும் முன்மாதிரியாக அனுப்பப்பட்டவர்கள். அதற்கேற்றவாறு அவருடைய நபித்துவ வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களும் அவரது தோழர்களாலும் அன்னாரது துணைவியர்களாலும் அறிவிக்கப் பட்டு அவை பரிசோதிக்கப் பட்டு மிக நேர்த்தியாக பதிவு செய்யப் பட்டிருப்பதைக் காண்கிறோம். இப்பதிவுகளுக்கு ஹதீஸ்கள் என்று கூறப்படும். இவ்வுலகில் வாழ்ந்த எந்த தலைவருடையதும் அல்லது எந்த மதகுருமார்களுடையதும் அல்லது வரலாற்று நாயகர்களுடையதும் வரலாறு இவ்வளவு நுணுக்கமாக மற்றும் ஆதார பூர்வமாக பதிவுசெய்யப் பட்டதில்லை.

**அழியாது தொடரும் தாக்கம்**

மனித வாழ்வோடு சம்பந்தப் பட்ட எல்லா துறைகளுக்கும் அவருடைய வாழ்விலிருந்து அழகிய முன்மாதிரியைக் காணமுடிகிறது. உதாரணமாக அவரை பணியாளாக, எஜமானனாக, வியாபாரியாக சாதாரண குடிமகனாக, போர் வீரராக, படைத்தளபதியாக, ஜனாதிபதியாக, ஆன்மீகத் தலைவராக, கணவராக, தந்தையாக, அவரது வாழ்நாளில் கண்டவர்கள் எடுத்துக் கூறும் செய்திகளின் தொகுப்புதான் ஹதீஸ்கள் என்பவை. அவரது வீட்டுக்கு உள்ளே வாழ்ந்த வாழ்க்கையும் வெளியே வாழ்ந்த வாழ்க்கையும் என அனைத்துமே அங்கு பதிவாகின்றன. அவர் கூ.றிய வார்த்தைகள், அவர் செய்த செயல்கள் , பிறர் செய்யக் கண்டு அவர் அங்கீகரித்த செயல்கள் என அனைத்தும் இன்று இஸ்லாமிய சட்டங்களுக்கு அடிப்படையாகின்றன.

அன்னாரது வரலாற்றின் இன்னொரு அற்புதம் அவரது வாழ்க்கை வரலாறு ஏடுகளில் மட்டுமல்ல, எண்ணங்களில் மட்டுமல்ல, அவரைப் பின்பற்றி வாழ்ந்த மற்றும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது என்பது! அன்று அவரிட்ட கட்டளைகள் இன்றும் மீறப் படாமல் பின்பற்றப் படுகின்றன என்பது மட்டுமல்ல, அவரது அன்றாடப் பழக்க வழக்கங்களை அறிந்து அதைப் போலவே தம் வாழ்வை அமைக்கத் துடிக்கும் மக்கள் கோடானுகோடி! உதாரணமாக அவர் தொழுகையில் எவ்வாறு நின்றார், அமர்ந்தார், எவ்வாறு உணவு உண்டார், என்பதை அறிந்து அதைப் போலவே வாழையடி வாழையாக கடைப் பிடிப்பவர்கள் முஸ்லிம்கள். அன்று அவர் தாடி வைத்திருந்தார், இன்று கோடிக்கணக்கான மக்கள் முகத்தில் அதைக் காணமுடிகிறது! ஏனெனில் இறைவனே அவரைப் பற்றி இவ்வாறு கூறுகிறான்:

- **அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது. (திருக்குர்ஆன் 33:21)**

# நபிமொழிகள் கூறும் நற்பண்புகள்

"மக்களை அதிகமாக சுவர்க்கத்தில் புகுத்துபவை இறையச்சமும் நற்குணமும்தான்" என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி). நூல் : திர்மிதீ, ஹாகிம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிச் சென்ற ஒரு சில நற்குணங்களை இங்கு காண்போம்:

## தன்னலம் போல பிறர் நலம்

● உங்களில் ஒருவர் தமக்கு விரும்புவதையே தம் சகோதரனுக்கும் விரும்பாதது வரை (முழுமையான) இறைவிசுவாசம் கொண்டவராக மாட்டார் (நூல் : புஹாரி)

## பகைமை தவிர்

● மக்களை அமைதியுடன் செவி தாழ்த்தி கேட்கும்படி செய்வீராக! எனக்கூறிவிட்டு (மக்கள் அமைதியுற்ற பின்னர்) எனக்குப் பிறகு நீங்கள் ஒருவர் கழுத்தை ஒருவர் வெட்டிக்கொள்ளும் இறைமறுப்பாளர்களாக மாறிவிட வேண்டாம் (நூல்: புஹாரி)

## கட்டிடம் போல உறுதியாய் இணைந்திருங்கள்

● ஒரு கட்டிடத்தின் பகுதி இன்னொரு பகுதியை எப்படி வலுப்படுத்திகொண்டிருக்கிறதோ அது போலவே ஒரு விசுவாசி இன்னொரு விசுவாசியின் விஷயத்தில் நடந்து கொள்ள வேண்டும். என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தங்கள் விரல்களை கோர்த்துக் காட்டினார்கள். (நூல்: புஹாரி)

## அக்கிரமக்காரனுக்கு உதவி?

'உன் சகோதரன் அக்கிரமக்காரனாக இருக்கும் நிலையிலும் அக்கிரமத்திற்கு உள்ளானவனாக இருக்கும் நிலையிலும் அவனுக்கு உதவி செய்' என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு மக்கள் 'இறைத்தூதரே! அக்கிரமத்திற்கு உள்ளானவருக்கு நாங்கள் உதவி செய்வோம், ஆனால் அக்கிரமக்காரனுக்கு எப்படி உதவி செய்வோம்?' என்று கேட்டனர். அதற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் 'அவனை அக்கிரமம் செய்யவிடாமல் தடுத்து விடுங்கள். இதுவே நீ(ங்கள்) அவனுக்கு செய்யும் உதவி' என்று கூறினார்கள். (நூல்: புஹாரி)

## நோய் கண்ட உடலைப் போலிருங்கள்

● ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும், (உண்மையான) இறை நம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். உடலின் ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக்கொண்டிருக்கின்றன, அத்துடன் உடல் முழுவதும் காய்ச்சல் கண்டு விடுகிறது. (நூல்: புஹாரி)

## பகைமை பாராட்ட எல்லை

● ஒருவருக்கொருவர் கோபம் கொள்ளாதீர்கள், பிணங்கிக்கொள்ளாதீர்கள், (மாறாக) இறை அடியார்களே! (அன்பு பாராட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள். எந்த ஒரு முஸ்லிமும் தம் சகோதரனுடன் மூன்று நாட்களுக்கு மேல் பேசாமல் இருப்பது அனுமதிக்கப்பட்டதன்று. நூல்: புஹாரி

### விசுவாசிக்குத் தகாத பண்புகள்

● இறைநம்பிக்கையாளன் குத்திப் பேசுபவனாகவும் அடிக்கடி சாபமிடுபவனாகவும் இருப்பது இல்லை. மானங்கெட்ட செயல்புரிபவனாகவும், சண்டையில் தீய வார்த்தைகள் பேசுபவனாகவும் இருப்பதில்லை. (நூல் : ஹாகிம்)

### வெட்கமும் நற்பண்பே!

● வெட்கம் இறைநம்பிக்கையின் ஒரு பகுதியாகும். (நூல் : புகாரி, முஸ்லிம்)

### பணிவு அவசியம்

● ஒருவர் மற்றவர்மீது அக்கிரமம் புரியாமல், ஒருவர் மற்றவர் மீது பெருமை கொள்ளாமல் பணிந்தவர்களாக இருங்கள் என்று எனக்கு வஹி (இறைசெய்தி) அறிவிக்கப்பட்டுள்ளது. (நூல் : புகாரி, முஸ்லிம்)

### மானம் காத்தல்

● எவர் தன்னுடைய சகோதரனுடைய மானத்தை அவனறியாமலேயே காக்கிறாரோ இறைவன் அவருடைய முகத்தை மறுமையில் நெருப்பிலிருந்து காக்கிறான். (நூல் : திர்மிதி)

### சொர்க்க வாசல்கள்

● மக்களே! ஸலாமை (அமைதி நாடும் முகமன்)ப் பரப்புங்கள்! உறவினரோடு சேர்ந்து வாழுங்கள்! உணவளியுங்கள்! மேலும் இரவில் மக்கள் தூங்கும் போது நீங்கள் (எழுந்து) தொழுங்கள். அப்போது நீங்கள் சுவர்க்கத்தில் அமைதியுடன் நுழையலாம். (நூல் : புகாரி, முஸ்லிம்)

### நயவஞ்சகப் பண்புகள்

● நயவஞ்சகனுடைய அடையாளங்கள் மூன்று. (1)அவன் பேசினால் பொய்யே பேசுவான். (2)அவன் வாக்குறுதி கொடுத்தால் மாறு செய்வான். (3)அவனிடம் ஒரு பொருள் அல்லது பணி தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் அதில் மோசடி செய்வான். (நூல்கள் : புகாரி, முஸ்லிம்)

● பகைமை கொள்பவர்களும், தீயவர்களும்தான் இறைவனிடத்தில் கெட்டவர்கள்' என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபுதர்தா (ரழி). நூல் : திர்மிதி

### இறைவனின் வெறுப்பு

● கடுமையாகச் சண்டையிடுபவன், மனதில் பகைமையை வைத்திருப்பவன் இறைவனிடம் மிகவும் வெறுப்புக்குரியவன் ஆவான். (நூல்: முஸ்லிம்)


### பொறாமை என்ற நெருப்பு

● பொறாமை கொள்ளாதிருக்கும்படி உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில் நெருப்பு விறகைத் தின்று விடுவதைப் போன்று பொறாமை நற்செயல்களைத் தின்று விடும். (நூல்: அபூதாவூத்)

### சந்தேகம் தவிர்

● நான் உங்களை சந்தேகப்பட வேண்டாமென்று எச்சரிக்கின்றேன். ஏனெனில், செய்திகளில் மிகவும் பொய்யானது சந்தேகமேயாகும் (நூல்கள்: புகாரி, முஸ்லிம்)


# மறுமை வாழ்க்கை உண்மையே!



● மனிதர்களே! மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை பற்றி உங்களுக்கு ஏதேனும் ஐயம் இருந்தால் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் நாம் உங்களை மண்ணிலிருந்து, பிறகு இந்திரியத்திலிருந்து, பிறகு இரத்தக்கட்டியிலிருந்து, பிறகு வடிவமைக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்படாத சதைப் பிண்டத்திலிருந்து படைத்தோம். உண்மை நிலையை உங்களுக்கு நாம் விளக்குவதற்காகத்தான் (இவற்றை நாம் எடுத்துரைக்கின்றோம்).நாம் நாடுகின்ற (இந்திரியத்)தை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருவறைகளில் தங்க வைக்கின்றோம்.



பிறகு, உங்களைக் குழந்தை வடிவில் வெளிக்கொணர்கின்றோம் (பிறகு உங்களை வளர்க்கின்றோம்) நீங்கள் வாலிபத்தை அடைவதற்காக! மேலும், உங்களில் சிலர் முன்னரே திரும்ப அழைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். வேறு சிலர் மிக மோசமான வயோதிகத்தின் பக்கம் திருப்பப்படுகின்றார்கள் யாவற்றையும் அறிந்த பிறகு எதையும் அறியாத நிலையை அடைவதற்காக! இன்னும் நீங்கள் பார்க்கின்றீர்கள்: பூமி வறண்டு கிடக்கின்றது அதில் நாம் மழையைப் பொழியச் செய்ததும் உடனே அது சிலிர்த்து, செழித்து வளர்ந்து விதவிதமான அழகிய தாவரங்களை முளைப்பிக்கச் செய்கிறது. (இதைப்போலவே மறுமையில் நீங்கள் உயிர்த்தெழுந்து வருவீர்கள்!) (திருக்குர்ஆன் 22:5)



From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

(PRINTED MATTER)

To

..................................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

- நிச்சயமாக இந்த குர்ஆன் முற்றிலும் நேராக இருக்கும் நல் வழியைக் காட்டுகிறது. அன்றியும் நற்செயல்கள் செய்து வரும் இறை விசுவாசிகளுக்கு, நிச்சயமாக மிகப் பெரும் நற்கூலியுண்டு என்றும் நன்மாராயம் கூறுகிறது. (திருக்குர்ஆன் 17:9)



- ஆனால் அது (குர்ஆன்) அகிலத்தார் அனைவருக்குமே நல்லுபதேசமேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 68:52)